**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 03.09.2024 |
| Case No. | : O.S. 265/2019 | Nationality | : Indian |
| Name | : வினோத்கண்ணா(கிராம நிர்வாக அலுவலர், துகிலி கிராமம்) | Religion | : |
| | | Age | : 33 |
| Father's/Husband's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது துகிலி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருவிடைமருதூர் தாலுக்கா துகிலி கிராமம் புல எண்கள் 70/1 ஏ-யில் கண்ட சொத்திற்கான "அ" பதிவேடு , அடங்கல் பதிவேடு, சிட்டா பதிவேடு மற்றும் புல வரைபட பதிவேடு ஆகியவற்றிற்கான அசல் பதிவேடுகளை எடுத்து வந்துள்ளேன். மேற்படி அசல் பதிவேடுகள் எங்கள் அலுவலக அன்றாட பயன்பாட்டிற்கு தேவைபடுவதால் அதன் உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன். மேற்படி புல எண் 70/1 ஏ-யில் கண்ட சொத்திற்கான சிட்டா பதிவேட்டின் உண்மை நகல் **சா.சா.ஆ 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 70/1 ஏ-யில் கண்ட சொத்திற்கான "அ " பதிவேட்டின் உண்மை நகல் **சா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 70/1 ஏ-யில் கண்ட சொத்திற்கான புல வரைபடம் உண்மை நகல் **சா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 70/1 ஏ-யில் கண்ட சொத்திற்கான 1433 பசலிக்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் **சா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா எண்.988 ல் முருகன் மனைவி ராசாத்தி பெயரில் உள்ளது .

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு தாவா சொத்தை சென்று பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். எப்போது பார்வையிட்டேன் என்றால் சுமார் 20 நாட்களுக்கு

முன்பு சென்று பார்வையிட்டேன். சாசாஆ 4 அடங்கல் 1433 பசலிக்குரியது என்றால் சரிதான். அதற்கு முன்பாக உள்ள அடங்கல் என்னிடம் உள்ளது என்றாலும் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றாலும் சரிதான். அந்த அடங்கலை பார்வையிட்டால்தான் யார் சாகுபடி செய்தார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. சாசாஆ 4 அடங்கல் ஆவணத்தில் 7 வது காலத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் யார் குத்தகை சாகுபடி செய்து வருகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. 2018 ம் வருடம் என்ன பசலி என்றால் அடங்கல் கணக்கை பார்த்தால்தான் தெரியும். சாசாஆ 4 அடங்கல் ஆவணத்தில் 7 வது காலம் நிரப்பப்பட்வில்லை என்றால் சரிதான். நாங்கள் அடங்கல் கணக்கில் 7 வது காலத்தை நிரப்புவதில்லை என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு தாவா சொத்து யார் சாகுபடியில் இருந்தது என்பதை அப்போது இருந்த கிராம நிர்வாக அலுவலகரிடம் கேட்டால்தான் தெரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். சாசாஆ 1 சிட்டாவில் அது எந்த பலிக்குரியது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தாவா கிராமத்தில் எந்த வருடம் பணிக்கு சேர்ந்தேன் என்றால் 19.09.2022 ம் தேதி முதல் பணியில் இருக்கிறேன்.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.